غوجاراتي

# નબી ﷺ
# ની સુન્નત પર અમલ કરવો જરૂરી છે અને તેનો ઇન્કાર કરવો કુફ્ર છે

محمد صلى الله عليه وسلم

લેખક :
અબ્દુલ્ અઝીઝ બિન અબ્દુલ્લાહ
બિન બાઝ રહ

Islamhouse.com
المحتوى الإسلامي

وجوب العمل بسنة الرسول -صلى الله عليه وسلم وكفر من أنكرها- تاميلي

# நபி (ஸல்) அவர்களின் வழிமுறைப்படி செயற்படுவதன் அவசியமும், அதை மறுப்பவர்களின் நிராகரிப்பும்.


தொகுப்பு :

மதிப்பிற்குரிய அஷ்ஷேய்க்

அப்துல் அஸீஸ் இப்னு அப்தில்லாஹ் இப்னி பாஸ் (ரஹ்)

(அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக)



islamhouse.com

ح جمعية الدعوة و الارشاد وتوعية الجاليات بالربوة ، ١٤٤٥ هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

بن باز : عبدالعزيز بن

وجوب العمل بسنة الرسول - وكفر من أنكرها - غوجاراتي. / عبدالعزيز بن بن باز -ط١.. - الرياض ، ١٤٤٥

٣٠ ص ؛ ١٤ × ٢١ سم

ردمك: ٩-٠٨-٨٤١٧-٦٠٣-٩٧٨

١- السنة النبوية ٢- اصول الفقه أ.العنوان

ديوي ٢٥١,١٢ ١٤٤٥ / ٢٣٧٦

شركاء التنفيذ:

دار الإسلام جمعية الربوة رواد الترجمة المحتوى الإسلامي

يتاح طباعة هذا الإصدار ونشره بأي وسيلة مع الالتزام بالإشارة إلى المصدر وعدم التغيير في النص.

Tel: +966 50 244 7000
info@islamiccontent.org
Riyadh 13245- 2836
www.islamhouse.com

## உள்ளடக்கம்

*1. முன்னுரை* 05

*2. சட்டங்களை உறுதி செய்வதற்கான மூலாதாரங்கள்*

*(1) முதலாவது மூலாதாரம் - அல்குர்ஆன்* 07

*(2) இரண்டாவது மூலாதாரம் - அஸ்ஸுன்னா* 11

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன்.*

## முன்னுரை

அகிலத்தார் அனைவரையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனை அஞ்சி நடப்போருக்கே இறுதி முடிவும் சொந்தமானது. ஸலவாத்தும், ஸலாமும் அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதரும், அல்லாஹ்வின் அடியார்கள் அனைவருக்கும் சொப்பமனமாகவும் விளங்குகிற முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், அல்லாஹ்வின் வேதத்தையும், நபியவர்களின் ஸுன்னாவையும் அவற்றின் சொற்கள், அர்த்தங்கள் போன்றவற்றின் தூய்மையைப் பாதுகாத்து, அமானிதமாகவும், பொறுப்புணர்ச்சியுடனும் அடுத்த தலைமுறைக்கு எத்திவைத்த நபியவர்களின் குடும்பத்தார்கள், தோழர்கள் என அனைவருக்கும் உண்டாவதாக.

*அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக்கொண்டான்.*
*அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக்கொண்டார்கள்.*
*அவர்களை நல்ல முறையில் பின்பற்றக்கூடியவர்களாக*
*எம்மையும் அவன் ஆக்குவானாக!*

அடுத்ததாக,

சட்டங்களை உறுதிசெய்து கொள்வதற்கும், ஆகுமானவைகள், தடுக்கப்பட்டவைகள் போன்றவற்றில் தெளிவைப் பெறுவதற்கும் ஏற்கப்படும் பிரதான அடிப்படைகள் எக்காலத்திலும் பொய் கலக்காத அல்குர்ஆனாகும் என்பதில் அன்றும் இன்றும் அனைத்து அறிஞர்களும் ஒருமித்துள்ளனர் அதற்கு அடுத்து நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களாகும். அன்னார் தனக்கு வஹ்யி மூலம் அறிவிக்கப்பட்டதே தவிர அவர் தன் விருப்பப்படி எதையும் பேசமாட்டார்கள் அதற்கு அடுத்து இஸ்லாமிய சமுதாயத்தின் தலைசிறந்த அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும்(இஜ்மா).

வேறு சில அடிப்படைகளில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு பட்டுள்ளனர். கியாஸ் (ஒப்பீட்டாய்வு) அதில் பிரதானமாகும். அதற்குரிய நிபந்தனைகள் முழுமை பெற்றால் அதுவும் ஆதார மாகும் என்பதே பெரும்பான்மை அறிஞர்களின் கருத்தாகும். இம் மூலாதாரங்களுக்கான ஆதாரங்கள் மட்டிட முடியாதளவு அதிகமாகவே காணப்படுகின்றன.

# சட்டங்களை உறுதி செய்வதற்கான மூலாதாரங்கள்

*முதலாம் மூலாதாரம்:*

## அல்குர்ஆன்

### முதலாம் மூலாதாரம்: அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆன்

*அல்குர்ஆனின் அதிகமான இடங்களில் அல்குர்ஆனைப் பின்பற்றுவதும், அதைப் பற்றிப் பிடிப்பதும், அதன் வரம்புக ளுக்கு உட்பட்டு நடப்பதும் கட்டாயக் கடமை என்பதை அல்லாஹ்வின் வார்த்தைகள் தெளிவுபடுத்தியுள்ளன.*

*அல்லாஹ் கூறுகிறான் :*

**(மனிதர்களே!) உங்களுக்காக உங்கள் இறைவனிடமிருந்து இறக்கப் பட்டதையே பின்பற்றுங்கள். அவனையன்றி (மற்றெவரையும் உங்களுக் குப்) பொறுப்பாளர்(களாக ஆக்கி, அவர்)களை நீங்கள் பின்பற்றாதீர்கள். (எனினும், இதைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுபவர்கள் உங்களில் மிகக் குறைவுதான்.**

*மேலும் அல்லாஹ் கூறுகிறான் :*

**(மனிதர்களே!) இது வேத நூலாகும். இதை நாமே இறக்கிவைத் தோம். (இது) மிக்க பாக்கியமுடையது. ஆகவே, இதையே நீங்கள் பின் பற்றுங்கள். (அவனுக்குப்) பயந்து (பாவத்திலிருந்து விலகிக்) கொள் ளுங்கள். அதனால் அவனது அருளுக்குள்ளாவீர்கள்.**

*மேலும் அல்லாஹ் கூறுகிறான் :*

**"வேதத்தையுடையவர்களே! உங்களிடம் நிச்சயமாக நம் தூதர் வந்திருக் கிறார். வேதத்தில் நீங்கள் மறைத்துக் கொண்டிருந்த பல விடயங்களை**

**அவர் உங்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பிக்கிறார். மற்றும் பல விடயங்களை (அவர் அறிந்திருந்தும் உங்களுக்கு கேவலம் உண்டாகக் கூடாது என்பதற்காக அவற்றைக் கூறாது) விட்டுவிடுகிறார். நிச்சயமாக, அல்லாஹ்விடமிருந்து ஒளியும் மிகத்தெளிவான ஒரு வேதம் (இப்போது) உங்களிடம் வந்திருக்கிறது.**

**(உங்களில்) எவர்கள் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பின்பற்றுகி றார்களோ அவர்களை அதன் மூலமாக அல்லாஹ் சமாதானத்திற்குரிய வழியில் செலுத்துகிறான். இன்னும், இருள்களில் இருந்தும் வெளியேற் றித் தன் அருளைக் கொண்டு ஒளியின் பக்கம் கொண்டு வருகிறான். மேலும், அவர்களை நேரான வழியில் செல்லும்படியும் செய்கிறான்".**

(அல்குர்ஆன் 05:15-16)

*மேலும் அல்லாஹ் கூறுகிறான் :*

**(நிச்சயமாக எவர்கள் தங்களிடம் வந்த நல்லுபதேசத்தை நிராகரிக்கி றார்களோ (அவர்கள் மறுமையில் தங்கள் நிலைமையை உணர்ந்து கொள்வார்கள். ஏனென்றால்) நிச்சயமாக இது மிக கண்ணியமான வேதமாகும்.**

**இதற்கு முன்னும் சரி, இதற்குப் பின்னும் சரி உண்மைக்கு மாறான ஒரு விஷயமும் (திரு குர்ஆனாகிய) இதை (அணுகவே) அணுகாது. மிக்க புகழும் ஞானமும் உடையவனால் (இது) இறக்கப்பட்டது)**

*மேலும் அல்லாஹ் கூறுகிறான்:*

**(இந்த குர்ஆன் எனக்கு வஹீயாக அருளப்பட்டுள்ளது. இதைக் கொண்டு உங்களையும், (இதை அடைந்தவர்களையும் நான் அச்சமூட்டி எச்சரிப்ப தற்காகே ஆகும). (அல்குர்ஆன் 06:19)**

*மேலும் அல்லாஹ் கூறுகிறான்:*

**(மனிதர்கள் இதைக்கொண்டு எச்சரிக்கப்படுவதற்காகவும் (வணக்கத்திற் குரிய) அவன் ஒரே நாயன் தான் என்று அவர்கள் அறிந்து கொள்வதற் காகவும் அறிவுடையோர் நல்லணர்வு பெறுவதற்காகவும்)) மனிதர்க ளுக்கு இது ஓர் அறிவிப்பாகும்). (அல்குர்ஆன் 14:52)**

*மேற்கூறப்பட்ட அர்த்தத்தில் அதிகமான அல்குர்ஆன் வசனங்களைக் காண முடியும். அவ்வாறே அல்குர்ஆனை பலமாக பற்றிப் பிடிக்க வேண்டும் எனவும், அவ்வாறு பற்றிப் பிடிப்பது நல்வழியின் பக்கம் இட்டுச் செல்லும் எனவும், அதை விட்டு விடுவது வழிகேட்டின் பக்கம் இட்டுச் செல்லும் எனவும் ஆதார பூர்வமான ஹதீஸ்கள் பல குறிப்பிடுகின்றன.*

*தனது இறுதி ஹஜ்ஜின் போது நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:*

**"அல்லாஹ்வின் வேதமாகிய இதை உங்களிடம் விட்டுச் செல்கிறேன். இதை பற்றிப்பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவற மாட்டீர்கள்".**

*அறிவிப்பவர்:( ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரழி)),*
*நூல்: முஸ்லிம் 1218.*

*நபியவர்கள் கூறியதாக ஸைத் இப்னு அர்கம் (ரழி) அவர்கள் கூறினார்கள் :*

**"நான் உங்களுக்கு இரு விடயங்களை விட்டுச் செல்கிறேன். அதில் முதலாவது அல்குர்ஆன் ஆகும். அதில் நேர்வழியும், ஒளியும் இருக்கின்றன. எனவே, அல்லாஹ்வின் வேதத்தை பலமாக பற்றிப் பிடியுங்கள்"** *நூல்: முஸ்லிம்.*

*இவ்வாறு அல்லாஹ்வின் வேதத்தை பற்றிப்பிடிக்க ஆர்வமூட்டினார்கள். பின்னர்,*

**"எனது குடும்பத்தினர். உங்களிடம் எனது குடும்பத்தார் விடயத்தில் அல்லாஹ்வை நினைவுபடுத்துகிறேன், உங்களிடம் எனது குடும்பத்தார் விடயத்தில் அல்லாஹ்வை நினைவுபடுத்துகிறேன்" என்று கூறினார்கள்.** *(நூல்: முஸ்லிம் 2408).*

*அல்குர்ஆன் பற்றி நபியவர்கள் கூறிய மேலும் ஒரு செய்தியில்,*

**"இது அல்லாஹ்வின் கயிறாகும். யார் இதை பற்றிப் பிடிக்கிறாரோ, அவர் நேரான வழியில் இருப்பார். யார் இதை விட்டுவிடுகிறாரோ**

அவர் வழிகேட்டில் இருப்பார்" என இடம்பெற்றுள்ளது.

இதே அர்த்தத்தில் அதிகமான ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. அல்குர்ஆனையும், ஸுன்னாவையும் சேர்த்தே சட்டயாப்பாக எடுப்பது அவசியம் என்பதில் நபித்தோழர்கள், அவர்களுக்குப் பின் வந்த நம்பிக்கையாளர்கள், அறிஞர்களின் ஒருமித்த கருத்து தொடர்பாக அதிகமாகக் கூறத் தேவையேற்படாத விதத்தில் போதியளவு சான்றுகள் உள்ளன.

இரண்டாம் மூலாதாரம்:

## அஸ்ஸுன்னா

இரண்டாவது அடிப்படை : நபி (ஸல்) அவர்களின் ஆதாரபூர்வமான செய்திகளாகும். நபித்தோழர்கள், மற்றும் அவர்களுக்குப் பின் வந்த நம்பிக்கையாளர்கள், அறிஞர்கள் இதனை ஏற்கின்றனர்.

ஒருமித்து ஏற்கப்படும் பிரதான அம்மூன்று அடிப்படைகளுள் இரண்டாவது : நபி (ஸல்) அவர்களின் ஆதாரபூர்வமான செய் திகளாகும். நபித்தோழர்கள், மற்றும் அவர்களுக்குப் பின் வந்த நம்பிக்கையாளர்கள், அறிஞர்கள் இதனை நம்பிக்கை கொண்டு, ஆதாரமாக ஏற்று, இச்சமூகத்திற்குப் போதிக்கவும் செய்கின்ற னர். இது பற்றி பல நூல்களையும் தொகுத்துள்ளனர். உஸூலுல் பிக்ஹ் (மார்க்க சட்டக்கலையின் அடிப்படைகள்), முஸ்தலஹ் (ஹதீஸின் அடிப்படைகள்) நூல்களில் இதனைத் தெளிவுபடுத் தியுள்ளனர்.

இதற்கான ஆதாரங்கள் மட்டிட முடியாதளவு அதிகமுள்ளன. அல்குர்ஆனில் நபியவர்களைப் பின்பற்றுமாறு பணித்து இடம் பெற்றுள்ள வசனங்கள் இவற்றுள் சிலவாகும், இவை அன்னா ரின் காலத்தவருக்கும், அவர்களுக்குப் பின் வந்தோருக்குமான பொதுவான ஏவலாகும். ஏனெனில் நபியவர்கள் அனைவருக்கு மான அல்லாஹ்வின் தூதராகும். மேலும் மறுமை வரை அன்னா ரைப் பின்பற்றி, வழிபடும்படி அவர்கள் ஏவப்பட்டுள்ளார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள்தான் அல்லாஹ்வின் வேதத்தை விளக்கக் கூடியவர்கள், அதில் பொதுப்படையாக வந்தவற்றைத் தனது சொல், செயல், அங்கீகாரங்கள் மூலம் தெளிவுபடுத்தி

*யுள்ளார்கள். ஸுன்னா இல்லாவிடில் முஸ்லிம்கள் தொழுகை யின் ரக்அத்களையோ, அதன் முறைகளையோ, அதில் கடமை யானவற்றையோ அறிய முடியாது. நோன்பு, ஸகாத், ஹஜ், ஜிஹாத், நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல் போன்றவற் றின் விரிவான சட்டங்களை அறிந்திருக்க மாட்டார்கள். கொடுக்கல், வாங்கல், தடுக்கப்பட்டவைகள், அவற்றுக்காக அல்லாஹ் விதித்துள்ள குற்றவியல் தண்டனை முறைகள் எதனை யும் அறிந்திருக்க மாட்டார்கள்.*

*ஸுன்னாவைப் பின்பற்றுவது பற்றி இடம்பெற்றுள்ள சில இறை வசனங்கள் வருமாறு :*

*ஸூரா ஆல இம்ரானில் இதுபற்றி பின்வருமாறு வந்துள்ளது :*

**"நீங்கள் (அல்லாஹ்வின்) அன்பை அடையும் பொருட்டு அல்லாஹ்வுக் கும், (அவனுடைய) தூதருக்கும் கீழ்ப்படிந்து நடங்கள்".**

*ஸூரா நிஸாவில் பின்வருமாறு வந்துள்ளது :*

**"நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடங்கள். (அவ்வாறே அல்லாஹ்வுடைய) தூதருக்கும், உங்கள் அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். (நம்பிக்கையாளர்களே!) உங்களுக்குள் ஒரு விடயத் தில் பிணக்கு ஏற்பட்டால் மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால் அதை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள். (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் மனதிருப்தியுடன் ஒப்புக் கொள்ளுங் கள்.) இதுதான் உங்களுக்கு நன்மையும், அழகான முடிவும் ஆகும்".**

*மேலும் ஸூரா நிஸாவில் பின்வருமாறு வந்துள்ளது :*

**"எவர் (அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) கட்டுப்பட்டு நடக்கி றாரோ அவர்தான் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே கட்டுப்பட்டவராவார்.. ஆகவே, (நபியே! உம்மை) எவர்களும் புறக்கணித்தால் (அதற்காக நீர் கவலைப்பட வேண்டாம்.) அவர்களை கண்காணிப்பவராக உம்மை நாம் அனுப்பவில்லை".**

*ஸுன்னா ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாவிட்டாலோ, அது முழுமையாகப் பாதுகாக்கப்படாவிட்டாலோ மக்கள் பிணங்கிக் கொண்ட விடயங்களில் எவ்வாறு அல்குர்ஆன், ஸுன்னாவைப் பின்பற்றி, ஒப்படைக்க முடியும்? இக்கூற்றின் படி அல்லாஹ் தனது அடியார்களை இல்லாத ஒன்றின்பால் சாட்டி விட்டான் என்றாகி விடும். இது மிகப்பெரிய அசத்திய மாகும், மிகப்பெரிய இறைநிராகரிப்பாகும். அல்லாஹ்வைப் பற்றிய தீய எண்ணமாகும்.*

*ஸூரா நஹ்லில் பின்வருமாறு கூறுகின்றான் :*

**"இந்தக் குர்ஆனையும் (நபியே!) நாம் உமக்கு இறக்கி வைத்தோம். மனிதர்களுக்காக (உம்மீது) இறக்கப்பட்ட இதை நீர் அவர்களுக்குத் தெளி வாக எடுத்துக் காண்பிப்பீராக. (இதன் மூலம்) அவர்கள் சிந்தித்தறிந்து கொள்வார்கள்".**

*மேலும் அதே அத்தியாயத்தில் பின்வருமாறு கூறுகின்றான்:*

**"(நபியே!) இவர்கள் எவ்விடயத்தில் தர்க்கித்துக் கொண்டார்களோ அதை நீர் தெளிவாக்குவதற்காகவே இவ்வேதத்தை உம் மீது நாம் இறக்கி வைத்தோம். மேலும், நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இது நேரான வழியாகவும், ஓர் அருளாகவும் இருக்கிறது".**

*ஸுன்னா ஒரு அடிப்படையாக இல்லாவிட்டாலோ, அல்லது அது ஆதாரமாக இல்லாவிட்டாலோ அம்மக்களுக்கு இறக்கப் பட்டதைத் தெளிவுபடுத்துமாறு அல்லாஹ் எவ்வாறு நபி (ஸல்) அவர்களைச் சாட்டுவான்?*

*அதேபோன்றுதான் ஸூரா நூரில் இடம்பெறும் பின்வரும் வச னம் :*

**"(மேலும்) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் (உண்மையாக) கட்டுப்பட்டு நடங்கள். நீங்கள் புறக்கணித்தாலோ (நமக் கொன்றும் நஷ்டமில்லை. ஏனென்றால்) அவர் மீதுள்ள கடமை எல் லாம், அவர் (தன்) மீது சுமத்தப்பட்ட (தூதை உங்களுக்கு எடுத்துரைப்ப) து தான். உங்கள் மீதுள்ள கடமையெல்லாம் உங்கள் மீது சுமத்தப்பட்ட-**

**தில் (அவருக்கு)கட்டுப்பட்டு நடப்பது தான். நீங்கள் அவருக்கு கட்டுப்பட்டு நடந்தால் நீங்கள்தான் நேரான வழியில் சென்று விடுவீர்கள். (நம் தூதைப்) பகிரங்கமாக (தெளிவாக) அறிவிப்பதைத் தவிர, வேறொன்றும் நம் தூதர் மீது கடமையில்லை".**

*அதே ஸூராவில் மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:*

**"(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் (இறைவனுடைய) அருளை அடைவ தற்காக, தொழுகையைக் கடைப்பிடித்து தொழுது, ஸகாத்தும் கொடுத்து (அவனுடைய) தூதரை (முற்றிலும்) பின்பற்றி வாருங்கள்".**

*மேலும் ஸூரா அஃராபில் பின்வருமாறு கூறுகின்றான் :*

**"(நபியே!) கூறுவீராக: "மனிதர்களே! (நீங்கள் எந்த நாட்டவர் ஆயினும் எவ்வகுப்பாராயினும்) நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் ஆவேன். வானங்கள் பூமியின் ஆட்சி அவனுக்குரியதே! (வணக்கத்திற்குரிய) இறைவன் அவனைத் தவிர வேறு ஒருவருமில்லை. அவனே உயிர்ப்பிக்கிறான் மரணிக்கும்படி செய்கிறான். ஆகவே, அந்த அல்லாஹ்வையும், எழுதப் படிக்க அறியாத அவனுடைய இத்தூதரையும் நீங்கள் நம்பிக்கை கொள்வீர்களாக! அவரும் அல்லாஹ்வையும், அவனுடைய வசனங்களையும் நம்பிக்கை கொள்கிறார். ஆகவே, நீங்கள் நேரான வழியை அடைய அவரையே நீங்கள் பின்பற்றுங்கள்".**

*நேர்வழியும், இறையருளும் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்று வதில்தான் என்பதை மேற்கண்ட வசனங்கள் தெளிவாக அறி விக்கின்றன. ஸுன்னாவை அமுல்படுத்தாமல், அல்லது அது ஆதாரபூர்வமானதில்லை, அதனைச் சார்ந்திருக்க முடியா தென்றோ கூறினால் இது எவ்வாறு சாத்தியமாகும்?*

*மேலும் ஸூரா நூரில் பின்வருமாறு கூறுகின்றான் :*

**"ஆகவே எவர் அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களை சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்".**

*மேலும் ஸூரா ஹஷ்ரில் பின்வருமாறு கூறுகின்றான் :*

**“மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள் இன்னும், எதை விட்டும் உங்களை விலக்கு கின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்”.**

*இக்கருத்தில் பல இறைவசனங்கள் உள்ளன. அல்குர்ஆனைப் பின்பற்றுவதும், அதனைப் பற்றிப்பிடித்து, அதன் ஏவல், விலக் கல்களுக்கு வழிப்படுவதும் அவசியம் என்பதற்கான ஆதாரங்கள் ஏற்கனவே கூறப்பட்டதைப் போன்று இவையனைத்தும் நபி (ஸல்) அவர்களுக்கு வழிபடுவதும், அவர்கள் கொண்டு வந்த வற்றைப் பின்பற்றுவது அவசியமென்பதையும் அறிவிக்கின்றது. இவ்விரண்டும் இணைபிரியா இரு அடிப்படைகளாகும். ஒன்றை மறுத்தால் மற்றதையும் பொய்ப்பித்தவனாகி விடுவான். இது இறைநிராகரிப்பாகவும், வழிகேடாகவும், இஸ்லாத்தை விட்டும் வெளியேறும் செயலாகவும் அனைத்து அறிஞர்களும் ஒருமித்துக் கூறியுள்ளனர்.*

*இது பற்றி வந்துள்ள நபிமொழிகள் சில :*

*நபி (ஸல்) அவர்களுக்கு வழிப்பட்டு, அன்னார் கொண்டு வந்-ததைப் பின்பற்றுவது கடமை, அவர்களுக்கு மாறு செய்வது ஹராமாகும் என்பது பற்றி அன்னாரைத் தொட்டும் பல நபி மொழிகள் அதிக மக்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. இது அன் னாரின் காலத்தில் வாழ்ந்தோருக்கும், அவர்களுக்குப் பின் மறுமை வரை உள்ள அனைவருக்குமானதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின் றார்கள் :*

**“எனக்கு வழிப்பட்டவர் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவராவார், எனக்கு மாறு செய்தவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்தவராவார்”. *(புஹாரி 7137, முஸ்லிம் 1835).***

*நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :*

**“என் சமுதாயத்தார் அனைவரும் சுவர்க்கம் செல்வார்கள் ஏற்க மறுத்தவரைத் தவிர”** *என்று கூறினார்கள். மக்கள்,* **‘இறைத்தூதர் அவர்களே! ஏற்க மறுத்தவர் யார்?’** *என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள்,* **‘எனக்குக் கீழ்ப்படிந்தவர் சுவர்க்கம் புகுவார் எனக்கு மாறு செய்தவர் [சத்தியத்தை] ஏற்க மறுத்தவராவார்”** *என்று பதிலளித்தார்கள். (புஹாரி 7280).*

*நபி (ஸல்) அவர்கள் கூறியதாக மிக்தாம் பின் மஃதீகரிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :*

**“அறிந்து கொள்ளுங்கள், எனக்கு அல்குர்ஆனும் அது போன்ற ஒன்றும் அதனுடன் வழங்கப்பட்டுள்ளது. அறிந்து கொள்ளுங்கள், “நீங்கள் குர்ஆனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள், அதில் ஹலாலாகக் கண்டுகொண்டவற்றை ஹலாலாக்குங்கள், அதில் ஹராமாகக் கண்டுகொண்டவற்றை ஹராமாக்குங்கள்” என்று ஒரு மனிதன் தனது சோபாவில் வயிறு நிரம்பிய நிலையில் சாய்ந்த வாறு கூறப்போகின்றான்”.** *(அபூதாவூத் 4604, அஹ்மத் 17174, ஹாகிம் 371).*

*நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ராபிஃ (ரலி) அவர்கள் அவரது தந்தை கூறியதாக கூறுகின்றார்கள் :*

**“நான் ஏவிய அல்லது தடுத்த விடயங்களில் ஒன்று வரும் போது எமக்குத் தெரியாது, அல்லாஹ்வின் வேதத்தில் நாம் கண்டதைப் பின்பற்றுவோம் என்று உங்களில் ஒருவர் தனது சோபாவில் சாய்ந்த வாறு கூறப்போவதை நான் அறிவேன்”.** *(அபூதாவூத் 4605, இப்னு மாஜா 13).*

*மிக்தாம் பின் மஃதீ கரிப் (ரலி) அவர்கள் கூறியதைத் தான் கேட்டதாக ஹஸன் பின் ஜாபிர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் கைபர் போரின் போது சில விடயங்களைத் தடுத்து விட்டு பின்வருமாறு கூறுகின்றார்கள் :* **“எனது வார்த்தை கூறப்படும் போது “எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் அல்லாஹ்வின் வேதமுள்ளது, அதில் ஹலாலாகக் கண்டு**

**கொண்டவற்றை ஹலாலாக்குவோம், அதில் ஹராமாகக் கண்டு கொண்டவற்றை ஹராமாக்குவோம்" என்று ஒரு மனிதன் தனது சோபாவில் சாய்ந்தவாறு கூறி என்னைப் பொய்ப்பிக்கப் போகின் றான். அறிந்து கொள்ளுங்கள் அல்லாஹ்வின் தூதர் ஹராமாக் கியதும் அல்லாஹ் ஹராமாக்கியது போன்றுதான்".**

*(ஆதாரம் : திர்மிதி 2855, இப்னு மாஜா 12, ஹாகிம் 371, இது ஆதாரபூர்வமான நபிமொழியாகும்).*

*நபி (ஸல்) அவர்கள் தனது பேருரைகளில் கலந்து கொண்டோர் கலந்து கொள்ளாதோருக்கு எத்திவைக்குமாறும், நேரடியாகக் கேட்பவரை விட எத்தி வைக்கப்படுபவர் மிக மனன சக்தி உள்ளவராக இருக்கலாம் என தோழர்களுக்கு உபதேசிக்கக் கூடியவர்களாக இருந்தார்களென பலரைத் தொட்டும் அதிக மான நபிமொழிகள் உள்ளன.*

*இறுதி ஹஜ்ஜில் அரபா தினத்திலும், பெருநாள் தினத்திலும் மக்களுக்கு நபி (ஸல்) அவர்கள் உரையாற்றும் போது பின் வருமாறு கூறினார்கள் :*

**"இதில் கலந்து கொண்டோர் கலந்து கொள்ளாதோருக்கு எத்தி வைக்கவும், நேரடியாகக் கேட்பவரை விட எத்தி வைக்கப்படுபவர் மிக மனன சக்தி உள்ளவராக இருக்கலாம்"** *(புஹாரி 104, முஸ்லிம் 1354).*

*சமூகமளித்தோர், கேள்விப்பட்டோர் அனைவருக்கும் ஸுன்னா ஆதாரமாக இல்லாவிடில், மறுமை வரை அது நிலைத்திருக்கா விடில் அதனை எத்திவைக்குமாறு நபியவர்கள் தோழர்களுக்கு பணித்திருக்க மாட்டார்கள். எனவே அன்னாரிடமிருந்து ஸுன்னாவை நேரடியாகக் கேட்டவருக்கும், ஆதாரபூர்வமாக அது கிடைத்தவருக்கும் ஆதாரமாகக் கொள்ளப்படவேண்டு மென்பதை இதன் மூலம் அறியலாம்.*

*நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களின் சொல், செயல்களை மனனமிட்டு, பாதுகாத்து தமக்குப் பின் வந்த தாபிஈன்களுக்கு*

எத்திவைத்தார்கள். பின் அவர்களும் தமக்குப் பின்னால் வந்தோருக்கு எத்திவைத்தார்கள். இவ்வாறுதான் நம்பகமான அறிஞர்கள் இதனைக் காலா காலமாக, சமூகத்திற்கு அறிவித்து வந்துள்ளார்கள். அவற்றைத் தமது நூல்களில் தொகுத்து, ஆதாபூர்வமானதையும், ஆதாரமற்றதையும் வேறு பிரித்துள்ளார்கள். ஸுன்னாவில் ஸஹீஹ், ழுஈபை இணங்காண்பதற்காக தமக்கிடையே அறியப்பட்ட சில வரையறைகள், விதிமுறைகளை வகுத்துள்ளார்கள். அல்லாஹ் அல்குர்ஆனை முழுமையாகப் பாதுகாத்தது போன்று வீணர்களின் விளையாட்டுக்கள், நாத்திகர்களின் மறுப்புக்கள், அசத்தியவாதிகளின் திரிபுகளை விட்டும் ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் உட்பட ஹதீஸ் நூல்களில் அறிஞர்கள் கவனம் செலுத்தி, அவற்றை முழுமையாகப் பாதுகாத்துள்ளனர். அல்குர்ஆனும் இதனை உறுதிப்படுத்துகின்றது :

**"நிச்சயமாக நாம்தான் இவ்வேதத்தை (உம் மீது) இறக்கிவைத்தோம். ஆகவே, (அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாதவாறு) நிச்சயமாக நாமே அதைப் பாதுகாத்துக் கொள்வோம்"** *(ஹிஜ்ர் : 9).*

நபி (ஸல்) அவர்களின் ஸுன்னா அல்லாஹ்வால் அருளப்பட்ட இறைச்செய்தி என்பதில் ஐயமில்லை. அல்குர்ஆனைப் போன்றே ஸுன்னாவையும் அல்லாஹ் பாதுகாத்துள்ளான். அசத்தியவாதிகளின் திரிபுகள், அறிவீனர்களின் மாற்றுக் கருத்துக்களை மறுதலித்து, மடையர்கள், பொய்யர்கள், நாத்திகர்கள் புகுத்திய பொய்ச் செய்திகளை அப்புறப்படுத்தும் துறைசார்ந்த விமர்சன அறிஞர்களை அல்லாஹ் அதற்கென்றே சாட்டியுள்ளான். ஏனெனில் அல்லாஹ் ஸுன்னாவைத் தனது வேதத்தின் விளக்கவுரையாகவும், அதில் பொதுவாகக் கூறப்பட்டதைத் தெளிவுபடுத்தக் கூடியதாகவும் ஆக்கியுள்ளதுடன், அல்குர்ஆனில் கூறப்படாத சில தனித்துவமான சட்டங்களையும் உள்ளடக்கியுள்ளான். பால்குடி உறவு முறை, வாரிசுரிமை போன்றவற்றின் விரிவான சட்டங்கள், ஒரே சமயத்தில் ஒரு பெண்ணையும்,

அவளது மாமியையும் (தந்தையின் சகோதரி), அல்லது ஒரு பெண்ணையும், அவளது சின்னம்மா, பெரியம்மாவையும் (தாயின் சகோதரி) திருமணம் செய்ய முடியாது போன்ற அல் குர்ஆனில் கூறப்படாமல், ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் மாத் திரம் கூறப்பட்ட செய்திகளை இதற்கு உதாரணமாக எடுக்க லாம்.

**இதுபற்றி ஸஹாபாக்கள், தாபிஈன்கள், பின்னால் வந்த அறிஞர்கள் கூறியவை சில :**

ஸுன்னாவை கண்ணியப்படுத்தி, அதன்படி செயல்படுவது அவசியம் என்ற விடயத்தில் ஸஹாபாக்கள், தாபிஈன்கள், பின் னால் வந்த அறிஞர்கள் கூறியவை சில :

அபூ ஹுறைரா ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நபி (ஸல்) அவர்கள் மரணித்த பின் அரபிகளில் சிலர் (ஸகாத்தை மறுத்தன் மூலம்) இறைமறுப்பாளர்களாகிய போது அபூ பக்ர் (ரலி) (ஆட்சிக்கு வந்ததும்)கூறினார்கள் :

''அல்லாஹ்வின் மீது ஆணையாக, தொழுகையையும் ஸகாத்தை யும் பிரித்துப் பார்ப்போருடன் நிச்சயமாக நான் போரிடுவேன்''

அப்போது உமர் (ரலி) கூறினார்கள் :

நபி (ஸல்) இவ்வாறு கூறியிருக்க நீர் எவ்வாறு அவர்களுடன் போரிடுவீர்? :

'''லா இலாஹ இல்லல்லாஹ்' என்று கூறும் வரை மக்களுடன் போரிட நான் பணிக்கப்பட்டுள்ளேன். அதனைக் கூறியவர் தம் உயிரையும் உடைமையையும் என்னிடமிருந்து காத்துக் கொண் டார் தண்டனைக்குரிய குற்றம் புரிந்தவரைத் தவிர''

அப்போது அபூபக்ர் (ரலி) கூறினார்கள் :

''ஸகாத் செல்வத்திற்குரிய கடமையில்லையா? அல்லாஹ்வின்

*மீது ஆணையாக! நபி (ஸல்) அவர்களிடம் வழங்கி வந்த ஓர் ஆட்டுக் குட்டியை இவர்கள் வழங்க மறுத்தால் கூட அதை மறுத்ததற்காக நான் இவர்களுடன் போரிடுவேன்".*

*அப்போது உமர் (ரலி) கூறினார்கள் : "அபூ பக்கரின் இதயத்தை (தீர்க்கமான தெளிவைப் பெறும் விதத்தில்) அல்லாஹ் விசாலா மாக்கியிருந்தாலேயே இவ்வாறு கூறினார். அவர் கூறியதே சரி யானது என நான் விளங்கிக் கொண்டேன்" என்றார். (புஹாரி 1399, முஸ்லிம் 20).*

*ஏனைய நபித்தோழர்களும் இவ்விடயத்தில் அபூபக்கர் (ரலி) அவர்களைப் பின்துயர்ந்தார்கள். மதம் மாறியோரை இஸ்லாத் திற்கு மீட்கும் வரை போராடினார்கள். விடாப்பிடியாக இருந் தோரைக் கொன்றார்கள். ஸுன்னாவை கண்ணியப்படுத்தி, அதன்படி செயல்படுவது அவசியம் என்பதற்கு இச்சம்பவத்தில் தெள்ளத் தெளிவான எடுத்துக்காட்டு உள்ளது.*

*ஒரு பாட்டி தனக்குரிய சொத்துரிமை பற்றித் தெளிவு பெற அபூ பக்ர் (ரலி) அவர்களிடம் வந்த போது அப்பாட்டியிடம் பின் வருமாறு கூறினார்கள் : "அல்குர்ஆனில் நானறிந்த வகையில் உமக்குப் பங்கேதுமில்லை, நபி (ஸல்) அவர்கள் உமக்குப் பங்கு வைத்துத் தீர்ப்பளித்தார்களா என்பதும் தெரியாது, மக்களிடம் கேட்கிறேன்". பின் நபித்தோழர்களிடம் கேட்க பாட்டிக்கு நபி யவர்கள் ஆறிலொரு பங்கு வழங்கியதாக சிலர் சாட்சியம் கூற, அவ்வாறே இவர்களும் தீர்ப்பளித்தார்கள்.*

*உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு மத்தியில் அல்லாஹ்வின் வேதத்தை வைத்துத் தீர்ப்பளிக்குமாறும், அப்பிரச்சினைக்குரிய தீர்வு அல்லாஹ்வின் வேதத்தில் இல்லாவிடில் நபி (ஸல்) அவர் களின் ஸுன்னாவிலிருந்து தீர்ப்பளிக்குமாறு தமது கவர்னர்க ளுக்கு உபதேசிப்பார்கள். ஒரு நபர் தாக்கியதன் விளைவாக கர்ப் பிணிப் பெண்ணொருவரின் கரு சிதைந்த நிலையில் குறை மாதத்தில் பிரசவிக்கப்பட்ட விடயத்தில் அவர்களுக்கு சிக்கல் ஏற்பட்ட போது தோழர்களிடம் வினவினார்கள். அப்போது*

முஹம்மத் பின் மஸ்லமா (ரலி), மற்றும் முகீரா பின் ஷுஃபா (ரலி) ஆகியோர் நபி (ஸல்) அவர்கள் இது போன்ற விடயத்தில் ஓர் அடிமையின் அல்லது அடிமைப் பெண்ணின் பெறுமதியை தண்டப்பணமாக வழங்க வேண்டுமென தீர்ப்பளித்ததாக சாட்சி யமளித்தனர். அவ்வாறே உமர் (ரலி) அவர்களும் தீர்ப்பளித் தார்கள்.

கணவன் மரணித்த பின் ஒரு பெண் அவளுடைய வீட்டிலேயே இத்தா அனுஷ்டிப்பது பற்றி உஸ்மான் (ரலி) அவர்களுக்கு சிக் கல் ஏற்பட்ட போது அபூ ஸஈத் அல்குத்ரி (ரலி) அவர்களின் சகோதரி புரைஆ பின்து மாலிக் பின் ஸினான் (ரலி) அவர்கள் தனது கணவன் மரணித்த போது அவரது வீட்டிலேயே இத்தா முடியும் வரை இருக்குமாறு நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பணித் ததாகக் கூறினார்கள். உஸ்மான் (ரலி) அவர்களும் அவ்வாறே தீர்ப்பளித்தார்கள்.

இதேபோன்று தான் வலீத் பின் உக்பாவிற்கு மது அருந்திய தற்கான தண்டனையை ஸுன்னாவின் அடிப்படையிலேயே அமுல்படுத்தினார்கள். தமத்துஃ, கிரான் முறைகளில் ஹஜ் செய்வதை உஸ்மான் (ரலி) அவர்கள் தடுப்பதாக அலி (ரலி) அவர்களுக்குக் கேள்விப்பட்ட போது கிரான் அடிப்படையில் ஹஜ், உம்ரா இரண்டிற்கும் ஒன்றாக நிய்யத் வைத்து ஹஜ் செய் தார்கள். நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவை யாருடைய கூற்றுக் காகவும் விட மாட்டேன் எனவும் கூறினார்கள்.

தமத்துஃ, கிரான் முறைகளில் ஹஜ் செய்வது தொடர்பில் இஃப்ராத் முறையில் ஹஜ்ஜை மாத்திரம் தனியாகச் செய்வதுதான் சிறந்தது என்பதை அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரின் கூற்றுக்களை மேற்கோள்காட்டி சிலர் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுடன் வாதாடிய போது பின்வருமாறு கூறினார்கள் : “வானிலிருந்து கல்லு மழை உங்கள் மீது பொழியப் போகின் றது, நான் நபி (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறுகின்றேன், நீங்களோ அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) கூறியதாகக் கூறுகின்றீர்

கள்". அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) போன்றோரின் கூற்றுக்காவே ஸுன்னாவுக்கு மாறுசெய்யும் போது தண்டனை வரும் என அஞ்சப்படுகின்றதென்றால், ஏனையோரின் கூற்றுக்காகவோ, மனோஇச்சைக்குக் கட்டுப்பட்டோ, தனது ஆய்வு முடிவிற்கா கவோ ஸுன்னாவுக்கு மாறு செய்பவரின் நிலை எவ்வாறிருக்கும்? சில ஸுன்னத்தான விடயங்களில் ஒரு சிலர் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களுடன் வாதத்தில் ஈடுபட்ட போது "நாம் ஸுன்னாவைப் பின்பற்ற ஏவப்பட்டுள்ளோமா? அல்லது உமர் (ரலி) அவர்களைப் பின்பற்ற ஏவப்பட்டுள்ளோமா? என வினவி னார்கள்.

இம்ரான் பின் ஹுஸைன் (ரலி) அவர்கள் ஸுன்னாவை அறிவித் துக் கொண்டிருக்கும் போது ஒரு மனிதர் எமக்கு அல்குர்ஆனி லிருந்து கூறுங்கள் எனக் கூறிய போது கோபப்பட்டு பின்வரு மாறு கூறினார்கள் : "ஸுன்னா என்பது அல்லாஹ்வின் வேதத் திற்குரிய விளக்கவுரைதான். ஸுன்னா இல்லாவிடில் ளுஹர் நான்கு ரக்அத்கள், மஃரிப் மூன்று ரக்அத்கள், பஜ்ர் இரண்டு ரக்அத்கள் என்பதே நாம் அறிந்திருக்க மாட்டோம், மேலும் ஸகாத், மற்றும் இதர விடயங்களின் விரிவான சட்டங்களை நாம் அறிந்திருக்க முடியாது".

ஸுன்னாவை கண்ணியப்படுத்தி, அதன்படி செயல்படுவது அவ சியம் என்பதிலும், அதற்கு முரண்படுவதை எச்சரிப்பதிலும் நபித்தோழர்களை தொட்டும் வந்துள்ள செய்திகள் ஏராளமான தாகும். அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) நபி (ஸல்) அவர்களு டைய பின்வரும் செய்தியை அறிவித்த போது, "பெண்களை அல்லாஹ்வின் இல்லங்களுக்கு வருவதை விட்டும் தடுக்காதீர் கள்", அவரது புதல்வர்களில் ஒருவர் அல்லாஹ்வின் மீது சத் தியமாக அவர்களை நாம் தடுத்தே தீர்வோம் என்று கூறினார் கள். அப்போது இப்னு உமர் (ரலி) அவர்மீது கோபப்பட்டு, கடு மையாக ஏசினார்கள், "நான் நபி (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறுகின்றேன், நீரோ நாம் தடுத்தே தீர்வோம் என்று கூறுகின்

*றீரா?” என்று கூறினார்கள். அப்துல்லாஹ் இப்னு முகஃப்பல் (ரலி) என்ற நபித்தோழர் தனது உறவினர்களில் ஒருவர் சிறு கற்களை எறிந்து (வேட்டையாடிக்) கொண்டிருந்ததைக் கண்டு அதனைத் தடுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறியதாகப் பின் வருமாறு கூறினார்கள் : சிறு கற்களை எறிய வேண்டாமென்று தடுத்தார்கள்' மேலும், நபி அவர்கள் 'அவ்வாறு சிறு கற்களை எறிவதால் எந்தப் பிராணியும் வேட்டையாடப்படாது எந்த எதிரியும் வீழ்த்தப்படமாட்டான். மாறாக, அது பல்லை உடைக் கலாம் கண்ணைப் பறித்து விடலாம். (அவ்வளவுதான் அதனால் முடியும்)' என்று கூறினார்கள்.*

*அதன் பிறகு ஒரு முறை அதே மனிதர் சிறு கற்களை எறிந்து கொண்டிருப்பதைக் கண்டு. அவரிடம், 'நபி (ஸல்) அவர்கள் 'சிறு கற்கள் எறிவதைத் தடை செய்தார்கள்' என்று நான் உனக் குச் சொல்கிறேன். ஆனால், நீயோ (அதை அலட்சியம் செய்து விட்டு) சிறு கற்களை எறிகிறாயே? நான் உன்னிடம் இவ்வளவு இவ்வளவு காலம் பேசமாட்டேன்'' என்று கூறினார்கள்.*

*தாபிஆன்களில் ஒருவரான அய்யூப் அஸ்ஸிக்தியானீ (ரஹ்) கூறுகின்றார்கள் :*

*“நீ ஒரு மனிதரிடம் ஸுன்னாவை அறிவிக்க, அவன் இதனை விடுத்து, எமக்குக் குர்ஆனைப் பற்றி மாத்திரம் கூறுங்கள் எனக் கூறினால் அவன் வழிகேடன் என அறிந்து கொள்”. (பைஹகீ).*

*இமாம் அவ்ஸாஈ (ரஹ்) கூறுகின்றார்கள் : “ஸுன்னா அல் குர்ஆனை உறுதிப்படுத்தக் கூடியதாகும், அல்லது அதில் பொது வாகக் கூறப்பட்டதை விளக்கக் கூடியதாகும். அல்லது அதில் கூறப்படாத சட்டங்களைத் தெளிவுபடுத்தக் கூடியதாகும். அல்லாஹ் கூறுகின்றான் :*

**“மனிதர்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கா கவும் அவர்கள் சிந்திப்பதற்காகவும் உமக்கு இவ்வேதத்தை நாம் அருளி னோம்”.** *(நஹ்ல் : 44).*

மேலும் நபி (ஸல்) அவர்களின் பின்வரும் கூற்று ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது :

"நிச்சயமாக எனக்கு அல்குர்ஆனும், அதனைப் போன்ற ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது".

ஆமிருஷ் ஷஃபீ (ரஹ்) சில மனிதர்களைப் பார்த்து பின்வருமாறு கூறினார்கள் : ஹதீஸ்களை நீங்கள் விட்ட போதுதான் வழி தவறினீர்கள். (பைஹகீ). அதாவது ஆதாரபூர்வமான ஹதீஸ் களையே இங்கு நாடுகின்றார்கள். இமாம் அவ்ஸாஈ (ரஹ்) தனது மாணவர்களில் ஒருவரைப் பார்த்துக் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்களிடமிருந்து உமக்கு ஒரு செய்தி கிடைத்தால் அது விடயத்தில் பிறருடைய செய்திகளைக் கூறுவதை நான் உமக்கு எச்சரிக்கின்றேன். எனெனில் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வி டமிருந்தே செய்திகளை எத்தி வைக்கக் கூடியவராக இருந்தார் கள்". (பைஹகீ).

இமாம் ஸுப்யான் பின் ஸஈத் அஸ்ஸவ்ரீ (ரஹ்) கூறுகின்றார் கள்"அறிவு அனைத்தும் ஹதீஸ்களிலிருந்து பெறப்படுவதுதான்". (பைஹகீ).

இமாம் மாலிக் (ரஹ்) : "எங்கள் அனைவருடைய செய்திகளி லும் ஏற்கக் கூடியதும் உண்டு, தட்டக் கூடியதும் உண்டு, இந்த கப்ரில் இருப்பவரைத் தவிர" எனக் கூறி, நபி (ஸல்) அவர்களு டைய கப்ரை சுட்டிக் காட்டினார்கள்.

இமாம் அபூஹனீபா (ரஹ்) கூறுகின்றார்கள் :

"நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஒரு செய்தி வந்தால் அதனைத் தலைக்கு மேல் வைத்து ஏற்பேன்".

இமாம் ஷாபிஈ (ரஹ்) கூறுகின்றார்கள் :

"நபி (ஸல்) அவர்களிடமிருந்து எனக்கு ஆதாரபூர்வமான ஒரு செய்தி கிடைத்து அதனை நான் எடுக்கவில்லை எனின் எனது புத்தி பேதலித்து விட்டது என்பதற்கு உங்களை நான் சாட்சியாக்

*குகின்றேன்". மேலும் கூறுகின்றார்கள் :*

*"நான் ஒரு கூற்றைக் கூறி, நபி (ஸல்) அவர்களிடமிருந்து அதற்கு மாற்றமான ஒரு செய்தி வந்தால் எனது கூற்றைப் புறந்தள்ளி விடுங்கள்".*

*இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) தனது மாணவர்களில் ஒருவருக்குக் கூறுகின்றார்கள் :*

*"என்னைப் பின்பற்றவும் வேண்டாம், மாலிகைப் பின்பற்றவும் வேண்டாம், ஷாபிஈயைப் பின்பற்றவும் வேண்டாம். நாங்கள் எங்கிருந்து எடுத்தோமோ அங்கிருந்தே எடுக்கவும்".*

*மேலும் கூறுகின்றார்கள் :*

*"நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஆதாரபூர்வமான அறிவிப்பாளர் வரிசையுடன் ஒரு செய்தியை அறிந்தும் ஸுப்யானிடம் செல்லும் ஒரு கூட்டத்தைப் பார்த்து எனக்கு ஆச்சரியமாக உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் :*

**"ஆகவே எவர் அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களை சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்".** *(நூர் : 63),*

*பித்னா என்றால் என்னவென்று தெரியுமா?*

*பித்னா என்பது இணைவைப்பாகும். நபி (ஸல்) அவர்களின் சில வார்த்தைகளைத் தட்டினால் அவனது உள்ளத்தில் வழி கேட்டிலிருந்து ஒரு பகுதி ஏற்பட்டு, அவன் அழிய வாய்ப்புள்ளது".*

*பின்வரும் இறைவசனத்தில் இமாம் முஜாஹித் (ரஹ்) என்ற பிரபலமான தாபிஈ கூறுகின்றார்கள் :*

*"உங்களில் ஏதாவது ஒரு விடயத்தில் பிணக்கு ஏற்படுமானால் அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்-*

துவிடுங்கள்" (நிஸா : 59). "அல்லாஹ்விடம் ஒப்படைப்பது அவனது வேதத்திற்காகும், தூதரிடம் ஒப்படைப்பது அவர்களது ஸுன்னாவிற்காகும்". (பைஹகீ).

இமாம் ஸுஹ்ரீ (ரஹ்) கூறுகின்றார்கள் :

"ஸுன்னாவைப் பற்றிப் பிடிப்பதுதான் வெற்றியாகும் என எமக்கு முன் சென்ற அறிஞர்கள் கூறக்கூடியவர்களாக இருந்தார்கள்". (பைஹகீ).

சட்டங்களின் அடிப்படைகளைத் தெளிவுபடுத்தும் போது இமாம் இப்னு குதாமா (ரஹ்) தனது ரவ்ழதுந் நாழிர் எனும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார்கள் :

இரண்டாவது அடிப்படை நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவாகும். நபி (ஸல்) அவர்கள் உண்மையாளர் என்பதை அற்புதங்கள் பறைசாற்றுவதாலும், அவருக்கு வழிப்படுமாறு அல்லாஹ் கட்டளையிட்டிருப்பதாலும், அவரது ஏவல்களுக்கு மாறுசெய்ய வேண்டாமென எச்சரித்துள்ளதாலும் நபியவர்களின் ஸுன்னாவும் ஆதாராமாகக் கொள்ளப்படுகின்றது.

இமாமவர்களின் கூற்றிலிருந்து மேற்கோள் காட்ட வேண்டிய அளவு கூறப்பட்டுவிட்டது.

இமாம் இப்னு கஸீர் அவர்கள் பின்வரும் வசனத்திற்கான விளக்கவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

"ஆகவே எவர் அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களை சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்".

அதாவது நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கு மாறுசெய்வதாகும், இது அன்னாருடைய பாதை, வழிமுறை, ஸுன்னாக்கள், சட்டதிட்டங்களாகும். சொல், செயல்கள் அனைத்தும் அன்னாரின் சொல், செயல்களுடன் உரசிப் பார்க்கப்படும், அவற்றுக்கு

*உடன்பட்டது ஏற்கப்படும், அதற்கு முரணானது அதனை யார் கூறினாலும், செய்தாலும் அவருக்கே தட்டப்பட்டு விடும்.*

*இது குறித்த ஆதாரபூர்வமான ஸஹீஹான ஹதீஸில் பின்வரும் செய்தி பதிவாகியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :*

**"எவரேனும் ஒருவர் எமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை செய்வாரா யின் அது மறுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்".** *(முஸ்லிம் 1718).*

*அதாவது உள்ளும், புறமும் இத்தூதருடைய ஷரீஅத்திற்கு மாறு செய்தவர்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளட்டும்.*

*அவர்களுக்கு பித்னா ஏற்படுவதை அஞ்சிக் கொள்ளட்டும்.*

*அதாவது அவர்களது இதயங்களில் இறைநிராகரிப்பு, நயவஞ்ச கம், நூதனம் போன்றன ஏற்படுவதை அஞ்சிக் கொள்ளட்டும்.*

*அல்லது நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்.*

*அதாவது இவ்வுலகில் கொலை, தண்டனை, தடுத்து வைத்தல் போன்ற தண்டனைகள்.*

*அப்துர் ரஸ்ஸாக் - மஃமர் - ஹம்மாம் பின் முனப்பிஹ் என்ற அறிவிப்பாளர் வரிசையில், அபூஹுரைரா ரலி அவர்கள் அறி விப்பதாக இமாம் அஹ்மத் கூறுகின்றார் :*

*நபி (ஸல்) கூறினார்கள்:* **"எனது நிலையும் உங்களது நிலையும் ஒரு மனிதரின் நிலையை ஒத்திருக்கிறது. அவர் தீ மூட்டினார். அவரைச் சுற்றிலும் அது ஒளி வீசியபோது நெருப்பைச் சுற்றும் விட் டில் பூச்சிகளும் இதர பூச்சிகளும் அந்தத் தீயில் விழலாயின. அந்த மனிதரோ அவற்றை[த் தீயில் விழவிடாமல்] தடுத்துக் கொண்டிருந்தார். ஆனால், அவரையும் மீறி அவை தீயில் விழுகின் றன. இதுதான் எனது நிலையும் உங்களது நிலையும் ஆகும். [நரக] நெருப்பி[ல் விழுவதி]லிருந்து உங்களைத் தடுக்க உங்கள் இடுப்புகளை நான் பிடித்துக்கொண்டிருக்கிறேன். "நெருப்பிலிருந்து விலகி வாருங்கள்" என்று சொல்கிறேன். ஆனால், நீங்களோ**

**என்னையும் மீறி நரகத்தில் நுழைந்து கொண்டிருக்கிறீர்கள்"** *(முஸ்லிம் 2284, அஹ்மத் 8117).*

*அப்துர் ரஸ்ஸாகின் வாயிலாக புஹாரி (6483), முஸ்லிம் (2284) இருவரும் அறிவித்துள்ளனர்.*

*மிப்தாஹுல் ஜன்ன பில் இஹ்திஜாஜி பிஸ்ஸுன்னா எனும் நூலில் இமாம் ஸுயூதி (ரஹ்) கூறுகின்றார்கள் :*

*"நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்- அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக- நபி (ஸல்) அவர்களின் சொல், செயல் அடங்கிய ஆதாரபூர்வமான ஹதீஸ் ஆதாரமாகும் என்பதை மறுத்தவன் காபிராகி விட்டான், இஸ்லாத்தை விட்டும் அவன் வெளியேறி விட்டான். யூத, கிறிஸ்தவர்களுடனோ, அல்லது அல்லாஹ் நாடிய காபிர் கூட்டத்துடனோ அவன் எழுப்பப்படுவான்".*

*ஸுன்னாவை கண்ணியப்படுத்தி, அதன்படி செயல்படுவது அவசியம் என்பதிலும், அதற்கு முரண்படுவதை எச்சரிப்பதிலும் நபித்தோழர்கள் அவர்களை துயர்ந்தோர்களை தொட்டும் வந் துள்ள செய்திகள் ஏராளமானதாகும்.*

*நாம் மேற்கூறிய இறைவசனங்கள், நபிமொழிகள், அறிஞர்களின் கூற்றுகள் சத்தியத்தைத் தேடுபவனுக்குப் போதுமானதாகவும், திருப்தியளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என எதிர்பார்க்கின் றேன்.*

*எமக்கும், அனைத்து முஸ்லிம்களுக்கும் அல்லாஹ்வைத் திருப்திப் படுத்துவதன் பால் அனுகூலம் புரியுமாறும், அவனது கோபத்திற்கான காரணங்களை விட்டும் பாதுகாக்குமாறும், எம் அனைவருக்கும் நேர்வழி காட்டுமாறும் அவனிடமே கேட்கின்றேன். நிச்சயமாக அவனே கேட்கக் கூடியவன், சமீபத்திலுள்ளவன்.*

*ஸலாத்தும் ஸலாமும் எங்கள் நபியும் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் அவர்களின் தோழர்கள் மற்றும் அவரை நல்ல முறையில் பின்பற்றி வாழ்தோர் அனைவர் மீதிலும் உண்டாவதாக.*

**அப்துல் அஸீஸ் இப்னு அப்தில்லாஹ் இப்னி பாஸ் (ரஹ்)**

*அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக!*

# ننشر الإسلام بأكثر من 100 لغة

موسوعة القرآن الكريم

QuranEnc.com

موسوعة تضم تفاسير وتراجم موثوقة لمعاني القرآن الكريم

موسوعة الأحاديث النبوية

HadeethEnc.com

موسوعة تضم ترجمات للأحاديث النبويـــة وشروحها بعدة لغـــات

موسوعة المصطلحات الإسلامية

TerminologyEnc.com

موسوعة تضم ترجمات المصطلحات الإسلاميـــة وشروحها بعدة لغـــات

منتقى المحتوى الإسلامي

موسوعة تضم المنتقى من المحتوى الإسلامي باللغات

IslamHouse.com

مرجعيـــة مجانيـــة إلكترونية موثوقة للتعريف بالإســـلام

جـمـعـيـة الـدعــوة وتوعية الجاليات بالربوة

Rabwah

جمعية خدمة المحتوى الإســلامــي باللغـــات

**وجوب العمل بسنة الرسول ﷺ - وكفر من أنكرها**

નબી ﷺ ની સુન્નત પર અમલ કરવો જરૂરી છે અને તેનો ઇન્કાર કરવો કુફ્ર છે

અબ્દુલ્ અઝીઝ બિન અબ્દુલ્લાહ બિન બાઝ રહ